**ஐ.டி.எண்.94/2024** 26.09.2025

**தொ.த.சாட்சி 1 ரேவதி குறுக்கு விசாரணை**

27.011.2023 மற்றும் 12.12.2023 அன்று முறையே நான் 7 மற்றும் 20 நாட்கள் முன்அனுமதியின்றி பணிக்கு வரவில்லை என்று நிர்வாகம் எனக்கு குற்றச்சாட்டு குறிப்பாணைகள் அளித்தது என்றால் சரிதான். எனக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டு அதற்காக நான் சித்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்றதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தம்பியின் பெயர் சதீஷ். 30.12.2023 அன்று என் தம்பி எழுதி கொடுத்து நான் கையொப்பம் இட்ட ராஜினாமா கடிதம் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது **நி.த.சா.ஆ1**. அந்த ஆவணத்தில் நிர்வாகம் எனது ராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொண்டதாக கையொப்பமிட்டுள்ளது என்றால் சரிதான். அது குறித்த குறிப்பு **நி.த.சா.ஆ2**. 15.02.2024 அன்று நிர்வாகம் எனக்கு பணப்பலன்களை முழுவதுமாக அளித்ததாக கூறி எனக்கு கடிதம் அனுப்பியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 19.02.2024 அன்று நான் நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு நிர்வாகம் 25.02.2024 அன்று எனக்கு பதிலளித்தது அந்த பதில் கடிதம் **நி.த.சா.ஆ3**. எனது ராஜினாமா கடிதம் குறித்து நிர்வாகம் 08.04.2024 அன்று எனக்கு ஒரு கடிதம் அனுப்பியது என்றால் சரிதான். என்னுடைய ராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொண்ட பின்பு நிர்வாகம் 07.05.2024 அன்று ரூபாய் 83,877 மற்றும் ரூபாய் 29,491 எனக்கு சேர வேண்டிய பணப்பலன்களை என்னுடைய வங்கி கணக்கு உள்ள ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் செலுத்தியது என்றால் சரிதான். என் தம்பி எழுதிக்கொடுத்து அதில் நான் கையொப்பம் இட்டு ராஜினாமா கடிதத்தை நான் நிர்வாகத்திற்கு அளித்து அதை நிர்வாகமும் ஏற்றுக்கொண்டதால் இந்த மனுவில் நான் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2025.09.26 17:18:53 +0530